**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.444** **நாள் : 16.12.2025**

**மணலி ஏரியில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளின் காரணமாக தற்போது பெய்த மழையினால் ஏரியில் நீர் நிரம்பி ரம்மியமாக காட்சியளிக்கிறது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழையினை முன்னிட்டு ஆறுகள், நீர்வழிக் கால்வாய்களில் தூர்வாரி அதன் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகள் அமைத்தல், அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணி மேற்கொள்ளுதல், மழைநீரைச் சேமித்திடும் வகையில் விளையாட்டு மைதானங்கள் பூங்காக்கள் மற்றும் பொது இடங்களில் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள், குளங்களில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், புதிதாக குளங்கள் அமைத்தல், பூங்காக்களில் மழைநீர் உறிஞ்சும் பூங்காக்களுக்கான கட்டமைப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட மணலி ஏரியில் 29 ஏக்கர் பரப்பளவில் (1,17,160 சதுர மீட்டர்) 1.20 மீ. ஆழத்துடன் 4 இலட்சம் கனஅடி நீர்த்தேக்கம் உடையதாக இருந்தது. இதில் தற்போது அம்ரூத் மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 4 மீ. ஆழத்துடன் 12 இலட்சம் கன அடி நீர்த்தேக்கம் உடையதாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், கரைகளைப் பலப்படுத்துதல், அணைப் பகுதியில் சரளை கற்களைப் பதித்தல், சுற்றுச்சுவர் அமைத்தல், ஏரியில் மழைநீர் சேர்வதற்கும், உபரிநீர் வெளியேறுவதற்குமான

கட்டமைப்புகள் உள்ளிட்ட புனரமைப்புப் பணிகளும், சிறுவர் விளையாட்டுப் பகுதி, பூங்கா, அமர்வதற்கு இருக்கை வசதிகள், வாகன நிறுத்துமிடம், நடைபாதை, கைப்பிடிகள், மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, பாதுகாவலர் அறை, சிற்றுண்டி உணவகம் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மணலி ஏரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள புனரமைப்புப் பணிகளின் காரணமாக தற்போது பெய்த மழையினால் இந்த ஏரியில் நீர் நிரம்பி ரம்மியமாக காட்சியளிக்கிறது. இதனால் அருகிலுள்ள பகுதிகளில் மழைநீர் பாதிப்பு குறைந்து நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து மக்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை₹ மாநகராட்சி.**